**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 09.02.2023**

**Case No : CC 148/ 2019**

**Deposition of Witness : P.W. 4**

| | |
|---|---|
| **Name:** ராஜகுமாரி | **Caste:** |
| **Father / Husband Name:** முத்துசெல்வன் | **Calling:** |
| **Village:** படுக்கப்பத்து | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age:**39 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 09.02.2023**

((எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது))

<u>முதல் விசாரணை</u>

நான் படுக்கபத்தில் குடியிருந்து வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். அவர் என் கணவர் ஆவார். கடந்த 12.04.2019 ம் தேதி இரவு 1.30 மணியளவில் எதிரிகள் இருவரும் அ.சா.3 ன் வீட்டிற்கு சென்று நீ எப்படி அ.சா.1 ன் வீட்டிற்கு பால் கறக்க செல்வாய் என்று ஏசி உள்ளார்கள். அதனால் மறுநாள் காலை அ.சா.3 என்னுடைய கணவர் மளிகை கடை வைத்திருந்த கடைக்கு வந்து அ.சா.3 தன்னை எதிரிகள் இருவரும் ஏசியதாக சொன்னார். பின்பு காலை 9.30 மணிக்கு என்னுடைய கணவர் 1 வது எதிரிக்கு போன் செய்து அ.சா.3 ம் ஏன் என்னுடைய வீட்டிற்கு பால் கறக்க வரக்கூடாது என்று சொன்னாய் என்று கேட்டார். அவ்வாறு கேட்டதற்கு எதிரிகள் இருவரும் என்னுடைய கணவர் கடை வைத்துள்ள இடத்திற்கு வந்து எதிரிகள் இருவரும் சேர்ந்து என்னுடைய கணவராக அ.சா.1 ஐ அடித்து தாக்கினார்கள். எதிரிகள் இருவரும் அ.சா.1 ன் வேஷ்டியையும் உருவி விட்டார்கள். அ.சா.1 க்கு மூக்கு மற்றும் முகம் பகுதிகளில் முழுவதும் காயம்பட்டு ரத்தக் காயம் ஏற்பட்டது. அருவாளின் பின்பகுதியை வைத்து முதுகுப்பகுதி முழுவதும் அடித்ததில் உடல் முழுவதும் வீக்க காயம் ஏற்பட்டது. பின்பு அ.சா.1 ஐ டக்கர் வாகனத்தில் ஏற்றி படுக்கப்பத்து அரசு மருத்துவனைக்கு அனுப்பி வைத்தார்கள். பின்பு அங்கிருந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் உடன்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று குளுக்கோஸ் ஏற்றினார்கள், பின்பு அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவனைக்கு

மேல்சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அங்கு அ.சா.1 10 நாட்கள் உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். போலீசார் தூத்துக்குடியில் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது விசாரித்தார்கள். அ.சா.1 வழக்கு சம்பவம் குறித்து வாக்குமூலம் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

வழக்கு சம்பவத்தின் போது நான் என்னுடைய வீட்டில் தான் இருந்தேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு வந்த போது எதிரிகள் இருவரும் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் குறித்து என்னிடம் யார் சொன்னார்கள் என்றால் கலெக்டர் அலுவலகத்தில் வேலைபார்க்கும் கண்ணன் என்பவர் தான் சொன்னார். நான் வரும்போது அங்கு சுமார் 10 நபர்கள் இருந்தார்கள். நான் வந்து பார்க்கும்போது அ.சா.1 துணி இல்லாமல் சாலையில் கிடந்தார் என்றால் சரிதான். அ.சா.1 மயக்க நிலையில் இருந்தார் என்றால் சரிதான். டக்கரில் யார் அழைத்து சென்றார்கள் என்றால் நான் மற்றும் அ.சா.3 மற்றும் பக்கத்தில் இருந்த நபர்கள் அழைத்து சென்றோம். படுக்கப்பத்தில் அரசு மருத்துவனையில் அ.சா.1 மயக்க நிலையில் இருந்தார் என்றால் சரிதான். 108 ஆம்புலன்ஸ் யார் வரவைத்தார்கள் என்றால் படுக்கப்பத்து அரசு மருத்துவமனையில் இருந்து தான் வரச்சொன்னார்கள். உடன்குடி மருத்துவமனைக்கு செல்லும் போதும் மயக்க நிலையில் தான் இருந்தார் என்றால் சரிதான். அ.சா.1 க்கு காயம்பட்ட விபரத்தை அ.சா.3 தான் மருத்துவரிடம் தெரிவித்தார் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தார்கள். தற்போது குறுக்கு விசாரணையில் சொன்னது போல் தான் காவல் துறையின் விசாரணையிலும் சொன்னேன். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 இருசக்கர வாகனத்தில் செல்லும் போது வாகனத்தில் இருந்து கீழே விழுந்த காயத்தை கொண்டு எதிரி மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 09.02.2023**

**Case No : CC 148/ 2019**

**Deposition of Witness : P.W. 5**

| | |
|---|---|
| **Name:** ரவிக்குமார் | **Caste:** |
| **Father / Husband Name:** பன்னீர்துரை | **Calling:** |
| **Village:** படுக்கப்பத்து | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age:54** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 09.02.2023**

((எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது))

முதல் விசாரணை

நான் படுக்கப்பத்தில் குடியிருந்து மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசர் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 15.04.2019 ம் தேதி மாலை 7.00 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு போலீசார் வரைப்படம் தயார் செய்தார்கள் அதில் நான் சாட்சி கையெழுத்து செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். (**பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. என் முன்னிலையில் பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

வீடு மற்றும் கடை வெவ்வேறு இடத்தில் உள்ளது என்றால் சரிதான். போலீசார் எந்த நேரத்தில் வந்து எந்த நேரத்தில் சென்றார்கள் என்று தெரியாது. என் கடைக்கு வந்து தான் போலீசார் பார்வை மகசரில் கையெழுத்து வாங்கினார் என்றால் சரிதான்.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.